# பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
# திருச்சிராப்பள்ளி - 620 024

**ஏப்ரல் 2020 இணையவழித் தேர்வுகளுக்கான நடப்பு ஆண்டு இளநிலை (ஆறாம்பருவம்), முதுநிலை (நான்காம்பருவம்) பாடங்கள் இறுதிப் பருவ மாணாக்கர்கள் மற்றும் ஏற்கனவே படித்து முடித்து இறுதிப் பருவப் பாடங்களில் தேர்ச்சி பெறாத மாணாக்கர்கள் உரிய தேர்வுக் கட்டணம் செலுத்தி தேர்வுகள் எழுத பதிவு செய்துள்ள மாணாக்கர்களுக்கு மட்டுமான வழிகாட்டுமுறைகள்.**

## மாணவர்களுக்கான அறிவுரைகள்

- இளநிலை மற்றும் முதுநிலை எழத்துத் தேர்வுகள் 21-09-2020 தொடங்கி 30-09-2020 முடிய நடத்தப்படுகிறது.
- இணையவழியில் தேர்வுகள் நடைபெறும்.
- வினாத்தாளில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின் படி தேர்வுக்காலம் 3 மணி நேரம் ஆகும்.
- நாள்தோறும் தேர்வு முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை நடத்தப்பெறும்.
- தேர்வு தொடங்குவதற்கு ஒருமணிநேரம் முன்னதாக பல்கலைக்கழக வலைதளத்தில் இருந்து பதிவெண்ணை பயன்பாட்டு சொல்லாக (User ID) மற்றும் கடவுச்சொல் (Password) (பிறந்தநாள் - பல்கலைக்கழகப் பதிவேடுகளின் படி) பயன்படுத்தி வினாத்தாள்களை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.
- நடப்புப் பயன்பாட்டில் உள்ள வகையின் படி வினாத்தாள் மூலம் தேர்வுகள் நடத்தப்பெறும். வினாத்தாள் பதிவிறக்கம் செய்ய, (1 மணி நேரம்) தேர்வு எழுதி (3 மணி நேரம்) அதனை **கல்லூரியில் ஒப்படைக்க அல்லது விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்யவோ(Upload) அல்லது PDF வகையில் மின்னஞ்சல் (e-mail) (2 மணி நேரம்)** வழியாக அனுப்பிடவோ மாணாக்கர்களுக்கு மொத்தமாக ஆறு மணி நேரகால அவகாசம் வழங்கப்படும். மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு ஒருமணிநேரம் கூடுதலாக ஒதுக்கப்படும்.
- தேர்வு எழுதி முடித்த பிறகு மாணாக்கர்கள் விடைத்தாளை (அனைத்து பக்கங்களும் பக்க வரிசைப்படி நூலினால் கட்டப்பட்டிருக்க வேண்டும்) தாங்கள் பயின்ற கல்லூரி அல்லது அருகாமையில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழ ஆளுமைக்கு உட்பட்ட ஏதேனும் ஒரு தன்னாட்சி / தன்னாட்சி அல்லாத கல்லூரி முதல்வரிடம் ஒப்படைக்கலாம்.
- பல்கலைக்கழக portal இல் விடைத்தாளை பதிவேற்றிய மாணாக்கர்கள் கல்லூரிக்கு சென்று விடைத்தாளை ஒப்படைப்பது அவர்களின் விருப்பத்துக்குரியது(optional).
- ஒருமுறை பதிவேற்றம் செய்த விடைத்தாளை மாற்றவோ திருத்தவோ இயலாது. ஆகவே, மாணாக்கர்கள், தங்களது விடைத்தாளை முழுமையாக சரிபார்த்து அதன் பின்னர் பதிவேற்றவும்.
- வினாத்தாள் பதிவிறக்கத்திற்கு பின் மாணாக்கர்கள் சொந்த பயன்பாட்டின் அடிப்படையில் A4 அளவிலான கோடு போடாத வெள்ளைத் தாள்கள் பயன்படுத்தி தேர்வினை எழுதவேண்டும்.
- விடைத்தாள்களை நீலம் அல்லது கருப்பு நிற மசியால் மாணாக்கர்கள் எழுத வேண்டும். விடைகளை தட்டச்சு செய்து அனுப்புவது, புத்தகங்களில் இருந்து எடுத்து, Google image பயன்படுத்துவது, ஒட்டி அனுப்புவது போன்ற செயல்களுக்கு அனுமதியில்லை.
- **மாணவர் பதிவெண், மையஎண்/கல்லூரிஎண், தாளின் பெயர், பாடக்குறியீடு, மற்றும் தேர்வு நாள் ஆகியவற்றை தங்கள் விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியில் எழுதி விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்தின் கீழ்ப் பகுதியில் கையொப்பம் இடவேண்டும்.**
- விடைத்தாளின் முகப்பு பக்கத்தில் எழுதப்பட்ட மொத்த தாள்களின் பக்க எண்ணிகையினை கட்டாயம் குறிப்பிடல் வேண்டும்.

- விடைத்தாளை கல்லூரியில் ஒப்படைத்தபிறகு கல்லூரி முதல்வரிடமிருந்து அதற்கான ஒப்புகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- விடைத்தாளை Scan செய்து பல்கலைக்கழக Portal க்கு அனுப்பிய அல்லது மின்னஞ்சல் வழி அனுப்பிய மாணாக்கர்களுக்கு தானியங்கி ஒப்பதல் வழங்கப்படும்.

- வினாத்தாள் பதிவிறக்கம் மற்றும் விடைத்தாள் பதிவேற்றம் தொடர்பாக ஏதேனும் விளக்கம் பெற வேண்டியவற்றுக்கு மாணாக்கர்கள் தங்கள் கல்லூரி முதல்வர் / தத்தம் துறைத்தலைவர் / நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

- 18.09.2020 அன்று முற்ப்பாகல் 11 மணிக்கு மாணக்கர்களுக்காக மாதிரித்தேர்வு நடத்தப்பெறும் இதர்கான இணைப்பு பல்கலைக்கழக வளைதளத்தில் 18.09.2020 காலை 9 மணிக்கு பதிவேற்றப்படும்.

- கல்லூரிப் படிப்பை முடித்துச்சென்ற மாணாக்கர்கள் ஏற்கனவே பதிவுசெய்து கட்டணம் செலுத்தியிருப்பின் இளைநிலைப் பாடமாக இருந்தால் ஆறாம் பருவமும், முதுநிலைப் பாடமாக இருந்தால் நான்காம் பருவத் தாள்களை மட்டும் எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

- தேர்வுகள் தொடர்பான எத்தகைய முறைகேடுகளிலும் மாணாக்கர்கள் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். பின்னர் முறைகேட்டில் ஈடுபட்டதாக தெரியப்பட்டால் மாணாக்கர்கள் பல்கலைக்கழக தற்போதைய விதிமுறைகளின் படி உரிய நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.

**தேர்வு நெறியாளர்** (பொ)